DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **SC.No.54/2025**
Prosecution Witness **P.W.17**

| | |
|---|---|
| Name : **திருமதி.மயிலாத்தாள்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

A5 எதிரி ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கள் செய்யப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர்
**நாள்: 07.04.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் வி.பி சித்தன் நகர், சாமுண்டிபுரம், திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில்தான் இருந்து வருகிறேன். இந்த வழக்கில் என்னை சின்னமனூர் போலீசார் விசாரணை செய்தார்கள்.எனது மாமனாருக்கு சொந்தமான வீடு, அவர் இறந்ததற்குப் பிறகு எங்களுக்கு சொந்தமானது, விபி சித்தன் நகர் முதல் தெருவில் அந்த வீடு அமைந்துள்ளது. அதில் மொத்தம் நான்கு வீடுகள் சிறுசிறுதாக நாங்கள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளோம். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 1ம் எதிரி ராஜ பிரபுவை எனக்கு தெரியும்.

2. சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு 1ம் எதிரி ராஜபிரபு எனது வீட்டில் சுமார் 1 ½ மாதங்கள் வாடகைக்கு இருந்தார். ரூ.3000/- முன்பணம் வாங்கிக் கொண்டு மாதம் ரூ.3000/- வீதம் மாத வாடகைக்கு விட்டிருந்தேன், ஆனால் அதன் பிறகு அவர் வாடகை செலுத்தவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள இரண்டாம் எதிரி ராஜபிரபுவின் அத்தை என சொல்லிக்கொண்டு அவர் வீட்டில் வந்து குடியிருந்தார். மூன்று நாட்கள் அவர் ராஜ பிரபு வீட்டில் குடியிருந்து வந்தார். தெரிந்த நபர் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததால்

அடையாள அட்டை எதுவும் நான் வாங்கிக் கொள்ளவில்லை, பிறகு வாங்கிக் கொள்ளலாம் என சொன்னதன் பேரில் நான் விட்டுவிட்டேன். வாடகை ஒப்பந்தம் எதுவும் போட்டுக் கொள்ளவில்லை வாய் பேச்சு தான்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 1ம் எதிரி எனது வீட்டில் குடியிருந்தது தொடர்பாக நான் வாடகை ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக வாடகைக்கு வரும்போது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை வாங்கி வைத்துக் கொள்வார்கள் என்றும் அவ்வாறு வாங்கி வைத்துக் கொள்ளாத பட்சத்தில் அவ்வாறு எதிரி நான் சொல்வது போல் வாடகைக்கு வரவில்லை என்றால் சரியல்ல, 1ம் எதிரி தான் என்னிடம் வாடகைக்கு வந்தார், நான் அவரை அடையாளம் காட்டுகிறேன். எனக்கு அந்த கட்டிடம் உரிமையானது என்பதை மெய்ப்பிக்க அது தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. திருப்பூரை பொருத்தமட்டில் அதிகமான வாடகை குடியிருப்புகள் உள்ளது என்றும், அங்கு பெண்களும், ஆண்களும் வேலைக்கு நிறைய ஊர்களில் இருந்து வருவார்கள் என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு பகுதியிலும் நிறைய பேர் வாடகைக்கு உள்ளார்கள் என்றால் சரிதான். நான் கூறுவது போல் எதிரிகளும் அந்த வாடகை கட்டிடத்தில் குடி இருந்தால் மற்ற வாடகைதாரர்களும் பார்த்திருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

3. எங்கள் வாடகை கட்டிடத்தில் சிசிடிவி கேமரா பொறுத்தியுள்ளோமா என்றால் அது பழைய வீடு எனவே சிசிடிவி கேமரா எதுவும் கிடையாது. பொதுவாக வாடகைக்கு விடவேண்டுமென்றால் அங்குள்ள நகராட்சியில் இது சம்பந்தமாக அனுமதி பெற வேண்டும் என்றால் சரியல்ல. என்னை தற்போது தான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் சின்னமனூர் காவல் நிலையத்தில் இருந்து ஏற்கனவே என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள், அப்போதே எனக்கு தெரியும்.

4. போலீசார் என்னை விசாரிக்கும் போது நான் ஊருக்குச் சென்று திரும்பி வந்து விட்டேன். போலீசார் என்னை பெயர், முகவரி மட்டும் கேட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை கேட்டு கையில் எழுதிக் கொள்ளவில்லை, தட்டச்சு செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் எனக்கு துணைக்கு எனது ஊரைச் சேர்ந்த ஒரு நபர் வருவார் அவருடன் வாருங்கள் என சொன்னதன் பேரில் நான் அவருடன் நீதிமன்றத்திற்கு இன்று வந்துள்ளேன். ஜமுனா ராணி எனக்கு இரண்டு முறை போன் செய்து திருப்பூருக்கு வந்து சந்தித்தார் என்றால் சரிதான். அவர் அழைத்ததன் பேரில் நான் இன்று சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியில்ல. அவர் என்னை நீதிமன்றத்திற்கு அழைக்கவில்லை.

5. சின்னமனூர் காவல் நிலையத்திலிருந்து ஆரம்பத்தில் என்னை விசாரித்த நபர்கள் தான் என்னை சாட்சி அளிக்க வரவேண்டும் என வற்புறுத்தியதன் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன், நேரிலும் ஒரு முறை வந்தார்கள். அதன் பிறகு போன் செய்து வரச் சொன்னதன் பேரில் நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான், உண்மையை உள்ளபடி சொல்லுமாறு சொன்னார்கள்.

6. எதிரிகள் எத்தனை நாட்கள் அங்கு இருந்தார்கள் எத்தனை மணிக்கு கிளம்பினார்கள் என்ற விபரம் எனக்கு குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான். தேதி, மாதங்கள் நான் குறித்து வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் போலீசார் அது பற்றிய விபரங்களை என்னிடம் விசாரித்து எழுதிக் கொண்டார்கள். நான் பதிவு அட்டை எதுவும் பராமரிப்பது கிடையாது. பழைய வீடு என்பதால் ஒரு மாதம் இருப்பார்கள், அதன்பிறகு காலி செய்துவிட்டு சென்று விடுவார்கள். எனவே நான் நிரந்தரமாக அட்டை எதுவும் பராமரிப்பது கிடையாது. பொதுவாக வாடகை குடியிருப்பு பகுதியில் புதிதாக நபர்கள் வந்தால் அவர்களை அனுமதிக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் யாரையும் பார்க்கவில்லை என்றும் வழக்குக்காக ஜமுனா ராணி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே வீட்டின் உரிமையாளர் என்றால் அது குறித்து ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே 1ம் எதிரிக்கு வாடகைக்கு விட்டிருந்தால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெற்று தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.07 18:02:52 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.